# <u>கடலூர் பெருநகராட்சி</u>

**2019ம் ஆண்டு ஜுலை மாதம் 31–ம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம்<br>கடலூர்<br>நாள் 30.07.2019 | தனி அலுவலர் (ம) ஆணையாளர்,<br>கடலூர் பெருநகராட்சி. |

## *பொருட்கள்*

| | |
|---|---|
| **1)** | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடங்கள் **4332** எண்ணிக்கை கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படி தனி நபர் கழிப்பிடங்கள் கட்டும் பணி சம்மந்தமாக மீண்டும் களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் கூடுதலாக **3261** எண்ணிக்கையில் கழிப்பறைகள் இல்லாத குடியிருப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால், மொத்தம் **7593** குடும்பங்களுக்கும் தனிநபர் கழிப்பறை கட்டுதல் அவசியமாகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.<br><br>அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. **835.23** இலட்சம்.<br>மத்திய அரசு பங்குத் தொகை ரூ. **303.72** இலட்சம்.<br>மாநில அரசு பங்குத் தொகை ரூ. **151.86** இலட்சம்.<br>நகராட்சி பங்களிப்பு ரூ. **151.86** இலட்சம்.<br>பயனாளிகளின் பங்களிப்பு ரூ. **227.79** இலட்சம்.<br><br>தனிநபர் கழிப்பிடம் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும் போது ஒரு கழிப்பிடம் ரூ. **12,000/–** வீதம் மதிப்பீட்டில் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளில் குறைந்த பட்சமாக ரூ.<br>மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. **8000/–** மானியமாகவும், மீதமுள்ள தொகையினை பயனாளிகள் தங்கள் பொறுப்பில் பங்களிப்பு செய்து பணி முடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டது. மேற்படி பயனாளிகளிடமிருந்து தொகை பெற்று பணிமேற்கொள்வது இயலாமல் போனதால், கடந்த ஆண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஒரு கழிப்பிடத்திற்கு ரூ. **3000/–** வீதம் தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து சமுதாய பொறுப்புணர்வு நிதி (CSR ) மூலம் தொகை பெற்று ரூ. **8000/–**க்கு பதிலாக மேற்படி ரூ. **3000/–** சேர்த்து மொத்தம் ரூ.**11000/–** தொகை வழங்கும் வகையில் பணிகளை முடிக்க உரிய அறிவுரையும், உத்திரவும், நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டது. |

| | |
|---|---|
| | அதன்படி தற்போது இதுநாள் வரை 3683 எண்ணிக்கை கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 842 எண்ணிக்கையிலான கழிப்பறைகள் இருமுறை பதிவாகவும் 785 எண்ணிக்கையிலான கழிப்பறைகள் ஆக்கிரமிப்பின்போது அகற்றப்பட்டும், அரசு புறம்போக்கு நிலத்தில் வசித்தவர்களும், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் பயனடைந்தவர்களுமாக கள ஆய்வின் போது கண்டறியப்பட்டது. இவைபோக மீதமுள்ள 2283 எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் கட்டி முடிக்க சமுதாய பொறுப்புணர்வு நிதி ரூ.68.49 இலட்சம் தேவையாக உள்ளது. சமுதாய பொறுப்புணர்வு நிதி வழங்கத் தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் 17.10.2018ல்கூடுதல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது களஆய்வு மற்றும் ஆய்வுக் கூட்டத்தின் போதும், 19.11.2018நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் இந்நகராட்சியில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் சமுதயா பொறுப்புணர்வு நிதி பெறுவது காலதாமதம் ஏற்படும் என்பதனால் நகரத்தின் சுற்றுப்புறத்தையும் பொது சுகாதாரத்தையும் பாது காக்கும் வகையில் மேற்படி தொகையை ரூ. 68.49 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும், சமுதாய பொறுப்புணர்வு நிதி பெறப்பட்டவுடன் செலவு செய்த தொகையினை மீள பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் 2283 எண்ணிக்கை கழிப்பிடங்கள் கட்டி முடிக்க சமுதாய பொறுப்புணர்வு நிதி ரூ.68.49 இலட்சம்நகராட்சி பொது நிதியிலிருந்து நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும், சமுதாய பொறுப்புணர்வு நிதி பெறப்பட்டவுடன் செலவு செய்த தொகையினை மீள பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 2) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பணியாட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 01.07.2018 முதல் 31.12.2018 வரை மேற்கொள்ள மன்ற தீர்மான எண் 2227 நாள் 29.06.2018–ல் அனுமதிபெறப்பட்டு 27.06.2018–ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி 27.06.2018 அன்று M/s. மகாலட்சுமி என்டர்பிரைசஸ், செங்கல்பட்டு. நிறுவனத்திற்கு வேலையுத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணியின் ஒப்பந்த காலம் 31.12.2018 அன்று முடிவடைகிறது. இப்பணிக்கு அடுத்த (01.01.2019 முதல் 31.03.2019 வரை ) மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் கூடுதல் விலை விகிதத்திற்கு ஒப்பந்தபுள்ளி பெறபட வாய்ப்பு உள்ளதால் இந்நகராட்சியின் நிதிநிலை சரி இல்லாத காரணத்தால் மேற்படி பணியை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தாரர் M/s. மகாலட்சுமி என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு மூன்று மாதத்திற்கு பணி காலத்தை நீட்டிக்கவும், இதற்கான தோரய செலவினம் ரூ.11,00,000/– இலட்சத்திற்கும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 3) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பெருட்டு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மின் உபகரணங்கள் கொள்முதல் செய்ய மன்ற தீர்மான எண் 2304 நாள் 27.09.2018–ல் அனுமதிபெறப்பட்டு 25.09.2018–ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, மன்ற தீர்மான எண் 2315, நாள் 27.09.2018 அனுமதி பெறப்பட்டு திரு.ஆர். நவநீதம் கடலூர் என்பவருக்கு வேலையுத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் மின் |

| | |
|---|---|
| | உபகரணங்கள் இருப்பு இல்லாததால் மன்ற தீர்மான எண் 2431, நாள் 30.01.2019 அனுமதி பெறப்பட்டு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட அதே விலை விகிதத்தில் மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணியை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தாரர் திரு.ஆர்.நவநீதம், கடலூர் என்பவருக்கு வேலைஉத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது மின் உபகரணங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு இருப்பு இல்லாத நிலையில் உள்ளதால் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே மீண்டும் மின் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 6.50இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் கூடுதல் விலை விகிதத்திற்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட வாய்ப்பு உள்ளதால் இந்நகராட்சியின் நிதிநிலை சரி இல்லாத காரணத்தால் அதே விலை விகிதத்தில் மேற்படி கொள்முதல் செய்யும் பணியை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தாரர் திரு.ஆர். நவநீதம் கடலூர், என்பவர் மூலம் வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.6.50 இலட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 4) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வரை உள்ள தெருக்களில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் உள்ள ஆள் இறங்கும் குழிகளில் பல பகுதிகளில் மூடிகள் உடைந்து போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. மேற்கண்ட ஆள் இறங்கும் குழிகள் உள்ள Man hole மூடிக்க மாற்றுவதால் சுமார் 50 எண்கள் 60CM dia extra heavy Duty fiber sunt concret (FRCC) flame and cool as per the type H.D 20 IS 12592/ 2002/ Pass 1x 2 நகராட்நிபணியை செய்ய தேவைப்படுகிறது எனவே மதிப்பீட்டு தொகை ரூ. 1,65,000/– க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 5) | கடலூர் பெருநகராட்சி முதுநகர் பகுதிகளில் வார்டு எண் 37, 38, 39 கோரி, சிங்காரத் தோப்பு மற்றும் சோனான்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்கள் பழைய 150mm மெயின் குழாய் பழுதடைந்து விட்டது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிப்படைந்து அடிக்கடி இடையூராகஉள்ளது. மேலும் சிங்காரதோப்பு மேல்பாலத்தில் செல்லும் குழாய் பழுதடைந்துள்ளதால் 160mm HDPE பைப் மற்றும் உதிரிபாகங்கள் பயன்படுத்தி 330mm நீளத்திற்கு குழாய் மாற்றியமைக்க ஆகும் தோராய செலவீனம் ரூ. 9,50,000/– க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 6) | கடலூர் பெருநகராட்சி பகுதி வார்டு எண்4ல் வில்வ நகர் , அழகப்பன் நகர் Pumping Station அருகில் ஆள்இறங்கும் குழிகள் மற்றும் நெல்லிக்குப்பம் நெடுஞ்சாலையில் அரசு மருத்துவமனை எதிரே தெருக்களில் உள்ள ஆள்இறங்கும் குழிகள் 1.50 மீட்டர் ஆழத்திற்கு சமீபத்தில் பெய்தமழையின் காரணமாக சேதமடைந்துள்ளது. இதனால் போக்குவரத்து இடைஞ்சலாகவும், பொதுசுகாதாரம் மாசுபட்டும் உள்ளது. எனவே பழைய ஆள்இறங்கும் குழிகளை இடித்து அப்புறப் படுத்தி புதியதாக 1.20x1.20x2.75m ஆழத்தில் R.C.C Manhole அமைக்கப்பட வேண்டும். மேலும் வில்வ நகர் Pumping Station அருகில் உள்ள ஆள் இறங்கு குழியை 20.00x 5.00 அளவிற்கு அகலப்படுத்தி புதுப்பிக்கவும் நெல்லிக்குப்பம் நெடுஞ்சாலையில் |

| | |
|---|---|
| | 15.00 x 7.00 அகலத்திற்கு புதுப்பிக்கவும் ஆகும் தோராய செலவீனம் ரூ. 16,30,000/– க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 7) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 4 வில்வ நகர் பகவதி அம்மன் கோவில் தெருவில் உள்ள பாதாளச்சாக்கடை 2 எண்ணிக்கை ஆள் இறங்கும் குழிகள் புதியதாக மாற்றியமைக்கவும் சேதமடைந்த இடத்தில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைக்கவும் ஆகும் தோராய செலவீனம் ரூ.18.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 8) | கடலூர் பெருநகராட்சியில் வார்டு எண் 5–ல் இராஜாம்பாள் நகர் மற்றும் வள்ளலார் நகர் உள்ள பாதாள சாக்கடை திட்டப்பணிகள் உள்ள ஆள் இறங்கும் குழிகளை சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக சாலையின் மட்டத்தில் இருந்து சுமார் 1.50mm அழத்திற்கு பள்ளம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்காணும் ஆள் இறங்கும் குழிகள் இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக ஆர்ச்சி manhole 1.20 x 1.20 x 2.75 m அமைக்கப்பட வேண்டும். மேலும் சாலை இரண்டு ஆள் இறங்கும் குழிகளும் 45.00 x 5.00 1.50மீட்டர் ஆழத்திற்கு இராவல் அடித்து சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் புதியதாக அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 18,50,000/– க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 9) | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் லாரி TN-31-B-4838ன் ஆயுள் காப்பீட்டு 09.08.2019 அன்றுடன் முடிவடைகின்றது. மேற்படி லாரிக்கு 10.08.2019 முதல் 09.08.2020 வரை ஓராண்டிற்கு ஆயுள் காப்பீடு புதுப்பித்துக் கொள்ள ஆகும் செலவினம் ரூ.41,190/–ஐ நேஷ்னல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி ஆயுள் காப்பீடு புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளவும், இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 10) | கடலூர் பெருநகராட்சி முதுநகர் பகுதிகளில் வார்டு எண் 37, 38, 39 கோரி, சிங்காரத் தோப்பு மற்றும் சோனான்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள பகிர்மான குழய்களில் பழைய M.S பைப் புதியதாக 160mm HDPE பைப் 1 எண்ணிக்கை மற்றும் 150mm DI pipe முறையே 330mm, 20 மீட்டர் நீளத்திற்கு மாற்றியமைக்கும் பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 26.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். | 0.08%<br>மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் | 1.04%<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.08% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**11)** கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வரை உள்ள தெருக்களில் பல பகுதிகளில் பாதாளச்சாக்கடை ஆள்இறங்கும் குழிகளில் மூடிகள் மூடிகள் சுமார் 50 எண்ணிக்கை மாற்றியமைக்க, 60cm dia extra heavy durty fiber reinforced on concrete (FRCC) frame and cover as per the type HD-20–IS 12592/2002 part 1 & 2 உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ரூ.1.65இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.03.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் | 0.01%<br>மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.76%<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.V. சுரேஷ்பாபு , பாகூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.08% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.V. சுரேஷ்பாபு , பாகூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**12)** கடலூர் பெருநகராட்சி முதுநகர் பகுதிகளில் வார்டு எண் 37, 38, 39 கோரி, சிங்காரத் தோப்பு மற்றும் சோனான்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்களில் குழாய் பழுதடைந்துள்ளதால் 160mm HDPE பைப் மற்றும் உதிரிபாகங்கள் பயன்படுத்தி 330m மற்றும் நீளத்திற்கு குழாய் மாற்றியமைக்கும் பணி ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.03.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். | 0.08% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் | 1.04% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.08% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**13)** கடலூர் பெருநகராட்சி பகுதி வார்டு எண்4ல் வில்வ நகர் , அழகப்பன் நகர் Pumping Station அருகில் ஆள்இறங்கும் குழிகள் மற்றும் நெல்லிக்குப்பம் நெடுஞ்சாலையில் அரசு மருத்துவமனை எதிரே தெருக்களில் உள்ள ஆள்இறங்கும் குழிகளை இடித்து அப்புறப் படுத்தி புதியதாக 1.20x1.20x2.75m ஆழத்தில் R.C.C Manhole அமைக்கப்படவும் மேலும் வில்வ நகர் Pumping Station அருகில் உள்ள ஆள் இறங்கு குழியை 20.00x 5.00 அளவிற்கு அகலப்படுத்தி புதுப்பிக்கவும் நெல்லிக்குப்பம் நெடுஞ்சாலையில் 15.00 x 7.00 அகலத்திற்கு புதுப்பிக்கும் பணிகளை ரூ.16.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.03.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர். | 2.51% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி

| | |
|---|---|
| | அளித்துள்ள திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| **14)** | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 4 வில்வ நகர் பகவதி அம்மன் கோவில் தெருவில் உள்ள பாதாளச்சாக்கடை 2 எண்ணிக்கை ஆள் இறங்கும் குழிகள் புதியதாக மாற்றியமைக்கவும் சேதமடைந்த இடத்தில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.03.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.<br><br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகிதத்திற்கு</th></tr><tr><td>1.</td><td>திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர்</td><td>0.07%<br>மதிப்பீட்டை விட குறைவு.</td></tr><tr><td>2.</td><td>திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர்.</td><td>2.43%<br>மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr></table><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| **15)** | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 5–ல் இராஜாம்பாள் நகர், மற்றும் வள்ளலார் நகரில் உள்ள பாதாளச்சாக்கடை ஆள் இறங்கும் குழிகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக ஆர்.சி.சி manhole 1.20x1.20x 2.75 மீட்டர் அளவிற்கு அமைக்கப்படவும், மேலும் அதே பகுதியில் உள்ள இரண்டு ஆள்இறங்கும் குழிகளில் 45.00 x 5.00 மற்றும் 1.50 மீட்டர் ஆழத்திற்கு கிராவல் அடித்து சிமெண்ட் கான்கீரீட் சாலைகள் புதியதாக அமைக்கும் பணிகளை ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.03.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| | |
|---|---|
| | <table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகிதத்திற்கு</th></tr><tr><td>1.</td><td>திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர்</td><td>0.07%<br>மதிப்பீட்டை விட குறைவு.</td></tr><tr><td>2.</td><td>திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர்.</td><td>2.43%<br>மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr></table><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.V. சுரேஷ்பாபு ,கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| 16) | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/பிபி3, நாள்.05.03.2019–ன் படி, தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி 14–ல் குறிப்பிட்டுள்ளவாறு 5 ஆண்டுகளுக்கு கட்டிட அனுமதி வழங்க ஏதுவாக புதிய திருத்திய கட்டணம் நிர்ணயம் செய்து 01.04.2019முதல் அமுலுக்கு வரும்படி மாவட்ட அரசிதழில் வெளியுடவும், இதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தால் தீர்மான எண்.2495, நாள்.29.03.2019–ல் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி திருத்திய கட்டணங்களை பிரசுரம் செய்யும்படி நகராட்சியால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ஓ.மு.ஜி3/18916/2019, நாள்.10.07.2019–ல் அரசு கிளை மேலாளர், அவர்களை மாவட்ட அரசிதழில் பிரசரம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போழுது கிளை மேலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 10/பி.தி.பி/ 2019, நாள்.17.07.2019–ல் பிரசுரம் செய்ய ஏதுவாக ரூ.6,300/– செலுத்தக் கோரி நகராட்சிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>ஏற்கனவே மன்றம் ஒப்புதலளித்தன்படி, 01.04.2019 முதல் அமுலுக்கு வரும்படி பிரசுரம் செய்ய இயலாத காரணத்தால், ஒப்புதலளிக்கப்பட்ட பட்டியலில் சில மாற்றங்கள் செய்து 01.11.2019 முதல் அமுலுக்கு வரும்படி தயார் செய்யப்பட்ட புதிய அறிவிப்பு பட்டியலை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இவ்வறிவிப்பு பட்டியலை பொதுமக்களின் பார்வைக்காக மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், இதற்கான செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | ஏற்கனவே மன்றம் ஒப்புதலளிக்கப்பட்டதன்படி 01.04.2019 முதல் அமுலுக்கு வரும்படி பிரசுரம் செய்ய இயலாத காரணத்தால், 01.11.2019 முதல் அமுலுக்கு வரும்படி புதிதாக தயார் செய்யப்பட்ட பட்டியலை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கான செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.2390/2019/எப்2) |

| | |
|---|---|
| 17) | கடலூர் பெருநகரார்ட்சி 2017–18ம் ஆண்டுக்குரிய தணிக்கைக் கட்டணம் ரூ.744813/–ஐ செலுத்த 2017–18ம் ஆண்டு பொதுநிதி தணிக்கை அறிக்கையில் பத்தி எண் 119ல் ஊதியம் மற்றும் இதர படிகளின் உண்மை செலவினத்தில் 50 சதவீதம் தணிக்கை கட்டணமாக ரூ.744813/–ஐ அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு, அதன் விபரத்தை தணிக்கைக்கு தெரிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்த நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினால் ரூ.744813ஐ கல்வி நிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| 18) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட இலகுரக ஓட்டுநர் பணிக்காக 1 )ஒரு) நபர் தேவைப்படுவதால் ஓட்டுநர் உரிமம் பெற்ற 10 ஆண்டுகள் ஓட்டுநர் பணியில் அனுபவம் வாய்ந்த தகுதியுள்ள திறமையான ஓட்டுநரை ஓாண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணி அமர்த்திட பணியாளர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.2,40,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மே.கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவல. / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| 19) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் வடகிழக்கு பருவமழை காரணமாக மழைநீர் தேங்கி, டெங்கு மற்றும் மலேரியா, சிக்கன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள்துறை, கடலூர் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் ந.க. எண் 1349/ அ1/2019 நாள் 14.03.2019ம் தேதிய கடிதத்தில், டெங்கு கொசுத்தடுப்பு பணியாளர்கள் (Domestic Breading Charakers) நகராட்சிக்கு 50 நபர்கள் வீதம் பணியாளர்கள் தற்காலிகமாக நகராட்சி ஆணையர் மூலமாக பணியமர்த்த வேண்டி பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு துறையின் 28.02.2019ம் தேதிய அனுமதி கோரிய அலுவலக குறிப்பில் அங்கீகாரம் மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>எனவே கொசு தடுப்பு பணியாளர்கள் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்ற தினங்களில் அவசரம் அவசியம் கருதி மார்ச் 2019 முதல் ஜுன் 2019 முடிய 5 மாதங்கள் ரூ.200/– தினக்கூலி அடிப்படையில் பணி செய்தமைக்கும், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் பணி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி டிபிசி பணியாளர்களை நபர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் செலவு நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி டிபிசி பணியாளர்களை அமர்த்தி கணப்பணி மேற்கொள்ளவும், இதற்குண்டான தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண் 3115/17/எச் 1) |
| 20) | இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் அசோக் லேலைண்ட் TN 31 BD 9025 என்ற காம்பாக்ட் லாரியின் மூலம் நகராட்சியில் உள்ள 45 வார்டுகள் மற்றும் அவ்வப்போது இயற்கை பேரிடர் பணிக்காகவும் இந்த லாரி பயன்பட்டு வருகிறது. தற்போது லாரியின் முன்பக்கம் டயர் இரண்டும், பின்பக்கம் 4 டயர்களும் தேய்ந்த நிலையில் உள்ளதால், அவசரம் அவசியம் கருதி புதியதாக வாங்கி பொருத்த வேண்டும் என்பதால், குறைந்த விலைப்புள்ளிகள் பெற்று பணி செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

**அ.கு.** மேற்கண்ட பணி அவசர அவசியம் கருதி செய்யவும், மேற்படி பணி பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளலாம். ( ந.க. எண் 5687/ எச் 1/ 2019)

**21)** கடலூர் பெருநகராட்சிக்கு இலகுரக ஓட்டுநர் பணிக்காக 1 (ஒன்று) நபர் சப்ளை செய்யும் பணி ஒரு வருடத்திற்கு ரூ.2.40 மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 10.07.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.00% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .P. பற்குணன், கடலூர் | 0.60% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி ,கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி ( மதிப்பீட்டு விலைவிகிதம் ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. சேஷாத்திரி, கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** கடலூர் பெருநகராட்சியில் ஓட்டுநராக 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகள் ஏதும் ஏற்படுத்தாமல் பணியாற்றியுள்ள 9 ஓட்டுநர்கள் திருவாளர்கள் 1) டி.பாஸ்கரன், 2) எ.சேகர், 3) எஸ்.இராஜன், 4) பி.ஸ்ரீதர், 5) கே.ராமலிங்கம், 6) வி.ஆறுமுகம், 7) ஜெ.அண்ணாமலை, 8) ஏ.கலைச்செல்வன், மற்றும் 8) பி.சத்தியமூர்த்தி ஆகிய ஓட்டுநர்களுக்கு தமிழக அரசு வழங்கும் தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க. எண் 498/2018/ஜே.3 நாள் 01.04.2019 எண்ணிட்ட கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
தகுதியுடைய ஓட்டுநர்களுக்கு சென்னை, எழுதுபொருள் அச்சகத் துறையில் அந்தந்த நகராட்சி அமைப்புகள் தங்கப் பதக்கத்திற்கான விலையை எழுதுபொருள் அச்சகத்துறையில் நேரில் செலுத்தி தங்கப்பதக்கத்தினை பெற்று வர மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படி தகுதியான ஓட்டுநர்கள் 9 க்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று தயாரிக்க உத்தேச செலவினம் ரூ.1,65,000/– ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே அவசரம் அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலவிடவும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து செலவிடலாம். (ந.க. எண் 8777/ 13/எச் 1)

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.07.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
கடலூர் பெருநகராட்சி.